
பக்கங்கள் 15 + 04

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை அதிகரிப்பு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தலைமையிலான பொருளாதார வேலைத் திட்டம் மற்றும் நாட்டில் உருவாக்கப்பட்ட அமை 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 பங்குனி 07 புதன்கிழமை 20.03.2024 அதிர்வு 233



### யாழ்ப்பாணத்தில் பரபரப்பு

# இந்தியத் தூதரகத்தை திடீரென முற்றுகையிட்ட போராட்டக்காரர்

### பொலிஸார் குவிப்பு; தொடர்கின்றது உண்ணாவிரதம்

(எஸ்.நிதர்ஷன்)

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டைக் கண்டித்து யாழ்ப்பாணம் மாவட்ட மீனவர்கள் இன்று காலை யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன் பாகக் கவனயீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ். மாவட்ட மீனவர்கள் நான்கு பேர் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்புப் போராட்டம் இன்று இரண்டாவது நாளாகவும் தொடர்கின்றது. 04





# அநுரகுமார இன்று கனடா விஜயம் தமிழர்களைச் சந்திக்கவும் ஏற்பாடு

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க இன்று மாலை கனடாவுக்குப் புறப்படுகின்றார். கனடாவாழ் இலங்கையர்களுடனான சில சந்திப்புகளில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்கின்றார்.

தேசிய மக்கள் சக்தியின் கனேடிய குழுவால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பிரதானமான இரு மக்கள் சந்திப்புக்களின் முதலாவது சந்திப்பு எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு கனடாவின் டொரண்டோ நகரிலும், இரண்டாவது சந்திப்பு 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு வான்கூவர் நகரிலும் இடம்பெறவுள்ளன.



# கோப் குழுவிலிருந்து 10 எம்.பிக்கள் விலகல்




கோப் எனப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலிருந்து விலகுவதாக தேசிய மக்கள் சக்தியின் தலைவரான நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க அறிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, துமிந்த திஸாநாயக்க ஆகியோர் இன்று முற்பகல் குறித்த குழுவில் இருந்து விலகிய நிலையில் அநுரகுமார திஸாநாயக்கவும் இன்று பிற்பகல் விலகுவதாக அறிவித்துள்ளார்.

இந்நிலையில் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவிலிருந்து இதுவரையில் 10 பேர் விலகியுள்ளனர்.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன நேற்று முன்தினமும், நாடாளுமன்ற உறுப்பினர்களான தயாசிறி ஜயசேகர, சரித்த ஹேரத், இரா.சாணக்கியன், ஹேஷா விதானகே, காமினி வலேபோட, எஸ்.எம். மரிக்கார் ஆகியோர் நேற்றும், நாடாளுமன்ற உறுப்பினர்களான வசந்த யாப்பா பண்டார, துமிந்த திஸாநாயக்க, அநுரகுமார திஸாநாயக்க ஆகியோர் இன்றும் கோப் குழுவின் பதவிகளிலிருந்து விலகியுள்ளனர்.

அந்தக் குழுவின் புதிய தலைவராக ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டமைக்கு எதிர்ப்புத் தெரிவித்தே அவர்கள் தமது பதவிகளை இராஜினாமா செய்துள்ளனர்.

# ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் மாகாண சபைத் தேர்தலும் நடக்கும்

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. உறுதி



ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்ற பின்னர் ஐக்கிய மக்கள் சக்தி ஆட்சியின் கீழ் மாகாண சபைத் தேர்தலும் விரைவில் நடத்தப்படும் என்று அக்கட்சியின் தேசிய அமைப்பாளரான நாடாளுமன்ற உறுப்பினர் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:-

"ஜனாதிபதியால் காணாமல் ஆக்கப்பட்டுள்ள உள்ளூராட்சி மற்றும் மாகாண சபைத் தேர்தல்களையும் நடத்த வேண்டியுள்ளது. அதிகாரப் பகிர்வுகோட்பாட்டின்அடிப்படையில்தான் மாகாண சபை உருவாக்கப்பட்டது. அந்தச் சபைகளை ஆளுநர்கள்தான் தற்போது நிர்வகிக்கின்றனர். மக்கள் பிரதிநிதிகள் இல்லை. இதுகூட அரசமைப்பு மீறல் செயலாகும்.

எனவே, ஜனாதிபதித் தேர்தலில் சஜித் பிரேமதாஸ வெற்றி பெற்ற பின்னர் நாடாளுமன்றத் தேர்தல் நடத்தப்படும். ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியின்கீழ் அதன்பின்னர் கூடிய விரைவில் மாகாண சபைத் தேர்தல் மற்றும் உள்ளூராட்சி சபைத் தேர்தல் நடத்தப்படும். மக்களின் வாக்குரிமையைப் பாதுகாப்போம்." – என்றார்.


# பஸில் தலைமையில் மொட்டுவின் முக்கிய மூன்று கூட்டங்கள் இன்று

ஆளும் கட்சியின் பிரதான கட்சியான ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய மூன்று கூட்டங்கள் இன்று நடைபெறவுள்ளன என்று ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பொதுஜன பெரமுனவின் நிறுவுநர் பஸில் ராஜபக்ஷ தலைமையிலேயே இந்தக் கூட்டங்கள் இடம்பெறவுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் முதல் சந்திப்பும், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்களுடன் இரண்டாவது சந்திப்பும், தொழிற்சங்க பிரமுகர்களுடன் மூன்றாவது சந்திப்பும் நடைபெறவுள்ளன.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அடுத்த கட்ட அரசியல் செயற்பாடுகள் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதன்போது கலந்துரையாடப்படவுள்ளன என்றும் அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.



# இசை நிகழ்ச்சியைக் கண்டுகளித்த ரணில்

சௌந்தரி டேவிட் ரொட்ரிகோ மற்றும் நெரஞ்சன் டி சில்வா ஆகியோருடன் இணைந்து செனுக் விஜேசிங்க வழங்கிய 'My Tribute' இசை நிகழ்ச்சியை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மற்றும் பேராசிரியர் மைத்திரி விக்கிரமசிங்க ஆகியோர் நேற்று பிற் பகல் கண்டுகளித்தார்கள்.

கொழும்பு லயனல் வெண்ட் திரையரங்கில் நடைபெற்ற 'My Tribute' இசை நிகழ்ச்சியில் கிறிஸ்டோ பிரின்ஸ் டிரம்ஸ் இசைத்ததோடு நதினி ஒலேகாசெக்ரேம் மற்றும் ஹேமால் குருவிதாராச்சி ஆகியோரும் கலைஞர்களாக இதில் இணைந்து கொண்டனர். சோல் சவுண்ட்ஸ் அகாடமி பாடகர் குழுவினர் இந்த இசை நிகழ்ச்சியில் பாடல் இசைத்தனர்.

தனது ஆரம்பக் கல்வியை வத்தளை லைசியம் இன்டர்நேஷனல் பாடசாலையில் பெற்ற ஷெனுக் விஜேசிங்க, இலண்டனில் உள்ள ஸ்டெபோர்ட்ஷயர் பல்கலைக்கழகத்தில் சர்வதேச வணிக முகாமைத்துவப் பட்டதாரி ஆவார். இளம் வயதிலேயே பியானோ பயிற்சியை ஆரம்பித்த அவர் 5 வயதில் பாடத் தொடங்கினார். இலண்டனில் உள்ள ரோயல் ஸ்கூல் ஆஃப் சிங்கிங்கில் டேவிட் ரோட்ரிகோ மற்றும் சி ஹேரமேக் ஆகியோரின் கீழ் இவர் கற்றுள்ளார்.

ஷெனுக் விஜேசிங்க பாடல், இசை மற்றும் நடிப்பு ஆகிய துறைகளில் பல்வேறு திறமைகளை வெளிப்படுத்தி உள்நாட்டிலும் சர்வதேச அளவிலும் பல விருதுகளைப் பெற்றுள்ளார்.

இந்த இசை நிகழ்ச்சியை காண உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து ஏராளமான இரசிகர்கள் வருகை தந்திருந்தனர்.







# முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்











## இந்தியத்....

யாழ். மாவட்ட கிராமிய கடற்றொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ். மாவட்ட கடற்றொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து நேற்றுக் காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்துக்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்தநிலையில், உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு ஆதரவு தெரிவிப்பதற்காக இன்று காலை வருகை தந்த மாதகல் மீனவர்கள் போராட்டத்தில் ஈடுபட்ட மீனவர்களுடன் இணைந்து பேரணியாக யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தின் முன்பாகச் சென்று கவனவீர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

போராட்டக்காரர்கள் திடீரெனத் தூதரகத்தை நோக்கிச் சென்று போராட்டத்தில் ஈடுபட்டதால் சிறிது நேரம் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டிருந்தது.

சிறிது நேரப் போராட்டத்தின் பின்னர் மீனவர்கள் மீண்டும் உணவு தவிர்ப்புப் போராட்டம் இடம்பெற்ற இடத்துக்கு வருகை தந்து தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

திடீரென மீனவர்கள் யாழ். இந்தியத் துணைத் தூதரகத்தை நோக்கிச் சென்றதால் உடனடியாக அதிகமான பொலிஸார் வரவழைக்கப்பட்டு தூதரகத்தின் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டது.

இந்நிலையில், மீனவர்கள் தொடர்ந்தும் தமது உணவு தவிர்ப்புப் போராட்டத்தை முன்னெடுத்து வருகின்ற அதே நேரத்தில் அவர்களுக்கு ஆதரவாகப் பல்வேறு இடங்களிலும் இருந்து மீனவர்கள் வருகை தந்து ஆதரவை வழங்கி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அநுரகுமார....

இந்தப் பிரதான மக்கள் சந்திப்புகளுக்கு மேலதிகமாக கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களுடன் சகோதரத்துவ சந்திப்புகளிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க பங்கேற்பார்.

## சுற்றுலாப்...

தியான சூழல் காரணமாக வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்துள்ளது எனவும், அதற்கமைய விமானப் பயணிகளால் அதிகமாகப் பயன்படுத்தப்படும் இடமாக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் மாறியுள்ளது எனவும் விமான நிலையம் மற்றும் விமானப் போக்குவரத்து சேவைகள் தனியார் நிறுவனத் தலைவர் அதுல கல்கெட்டிய தெரிவித்தார்.

அதன்படி 2024 ஜனவரி 1 முதல் மார்ச் 19 வரையில் 8 இலட்சத்து 50 ஆயிரம் விமானப் பயணிகள் விமான நிலைய சேவைகளைப் பெற்றுக்கொண்டுள்ளதோடு, இந்த வருட இறுதிக்குள் சுமார் ஒரு கோடி பயணிகள் விமான நிலையத்தைப் பயன்படுத்துவார்கள் என எதிர்பார்ப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

2022ஆம் ஆண்டு கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தைப் பயன்படுத்திய மொத்த விமானப் பயணிகளின் எண்ணிக்கை 50 இலட்சமாக இருந்தது எனவும், 2023ஆம் ஆண்டில் அந்த எண்ணிக்கையை 80 இலட்சமாக அதிகரிக்க முடிந்தது எனவும் அதுல கல்கெட்டிய சுட்டிக்காட்டினார்.





# சந்நிதியான் ஆச்சிரமத்தில் நடைபெற்றது முருகேசு சுவாமிகளின் 27 ஆம் குருபூசை!



சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைபண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் முருகேசு சுவாமிகளின் 27 ஆவது குருபூசை நேற்று முன்தினம் திங்கட்கிழமை இடம் பெற்றுள்ளது.

சந்நிதியான் ஆச்சிரம முதல்வர் கலாநிதி மோகன் சுவாமிகள் தலைமையில் இடம் பெற்ற குருபூசை நிகழ்வில் முதல் நிகழ்வாக செல்வச்சந்நிதி ஆலயத்தின் விசேட பூசை வழிபாட்டுகள் ஆரம்பமாகி சந்நிதியான் ஆச்சிரமத்தில் சுவாமியின் நினைவு பேருரையுடன் அறுபத்து மூவர் குருபூசை இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் சந்நிதியான் ஆச்சிரம தொண்டர்கள், சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டு பேரவையின் நிர்வாகிகள், முருகேசு சுவாமிகளின் பக்தர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்



# பெண் தலைமைத்துவ குடும்பத்துக்குச் சைக்கிள்

(கே.வசந்தன்)

வவுனியாவில் வசிக்கும் பெண் தலைமைத்துவக் குடும்பம் ஒன்றின் தொழில் நடவடிக்கைகளுக்காகச் சைக்கிள் ஒன்று வழங்கப்பட்டுள்ளது.

வவுனியா, மருக்காரம்பளைப் பகுதியில் 2 பிள்ளைகளுடன் வசித்து வரும் பெண் தலைமைத்துவ குடும்பம் ஒன்று பல்வேறு சிரமங்களுக்கு மத்தியில் கால் நடையாக சென்று தனது தொழில் நடவடிக்கைளையும், தனது வீட்டுத் தேவைகளையும் பூர்த்தி செய்து வந்தது.

பல்வேறு சிரமங்களுடன் வாழ்ந்து வந்த குறித்த குடும்பத்தினர் ஊடகவியலாளரிடம் விடுத்த கோரிக்கைக்கு அமைவாக திரு திருமதி சரவணமுத்துவின் முதலாம் ஆண்டு நினைவாக கனடாவில் வசிக்கும் கலைச்செல்வி, நகுலன் தம்பதியினர் அவர்களது பிள்ளைகளின் நிதியில், வாணி விஜயபாலாவுக்கு உதயம் கனடா அமைப்பின் ஊடாகச் சைக்கிள் வழங்கப்பட்டுள்ளது.

நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# கனடாவில் போதனை கிட்டும்

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுர குமார திஸாநாயக்க இன்று மாலை கனடாவுக்குப் புறப்படுகின்றார். கனடா வாழ் இலங்கையர்களுடனான சில சந்திப்புகளில் பங்கேற்பதற்காகவே அவர் அங்கு செல்கின்றார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

கனடாவில் வாழும் இலங்கைத் தமிழர் மற்றும் முஸ்லிம் மக்களுடன் சகோதரத் துவ சந்திப்புகளிலும் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸா நாயக்க பங்கேற்பார் என்றும் கூறப்பட்டது.

தமிழ்ப் புலம்பெயர் சமூகம் வலிமை யாக உள்ள கனடாவில், தமிழ் புலம் பெயர் சமூகத்தவர்களையும் அநுரகுமார திஸாநாயக்க சந்திக்கவிருக்கின்ற நிலை யில் அவர்களுக்காகவும் சில விடயங் களைச் சுட்டிக் காட்டி நினைவுபடுத்துவது பொருத்தமானது என்று நினைக்கின்றோம்.

இலங்கை - இந்திய ஒப்பந்த ஏற்பாடு களின் அடிப்படையில் 17 ஆண்டுகளாக இணைந்து இருந்த ஈழத் தமிழர் தாயகத்தை, நீதிமன்ற நடவடிக்கை என்ற சூழ்ச்சித் திட்டத்தின் மூலம் வடக்கு மாகாணம், கிழக்கு மாகாணம் என்று துண்டாட வைத்தவர்கள் இந்த ஜே.வி.பினர்தான்.

அதைத் தங்களின் பெருஞ்சாதனையாக இன்று வரை தென்னிலங்கை பௌத்த - சிங்களப் பேரினவாதிகள் மத்தியில் காட்டி, வாக்குத் திரட்டும் கேவல அரசிய லைத்தான் அநுரகுமாரவின் கட்சியினர் செய்து வருகின்றனர்.

2006 இல் மஹிந்த ராஜபக்ஷக்குப் பின்புலத்தில் பலமாக நின்று, அவரை ஆட்சிக்கு கொண்டு வந்து, பேரினவாத வெறியாட்டப் போரைத் தமிழர் தேசம் மீது மிக மோசமாக கட்டவிழ்த்து விட ராஜபக்ஷக்களை நெட்டித்தள்ளி உந்திய வர்களே இந்த ஜே.வி.பியினர்தான்.

தேர்தல் வாக்குகள் மூலம் அதிகாரத்தை கைப்பற்றுவதற்காக இப்போது உருத்தி ராட்சப் பூனையாக வேடமிட்டு தமிழர் தாயகத்திலும் புலம்பெயர் தேசங்களிலும் வாக்குப் பிச்சை கேட்டு வலம் வரு கின்றனர்.

இந்தப் பருப்பு எல்லாம் தமிழ் மக்களி டம் இலகுவில் அவியாது என்பதை ஜே.வி.பியினர் உட்பட்ட தேசிய மக்கள் சக்தியினருக்கு உறைப்பாக உணர்த்தப்பட வேண்டும்.

இந்தச் சமயத்தில் இதே அநுரகுமார திஸாநாயக்க குறித்து முன்னாள் வட மாகாண சபையின் உறுப்பினரும், ரெலோ அமைப்பின் முக்கியஸ்தருமான சபா குகதாஸ் இப்போது கூறியுள்ள கருத்துகளை ஒரு தரம் நினைவூட்டுவது பொருத்த மானது.

''இலங்கையின் ஆட்சிப் பீடத்திற்கு வரத் துடிக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸநாயக்க தேசிய இனப் பிரச்சினைக்கு தங்கள் கட்சி சார்பில் எவ்வாறான தீர்வை வழங்குவோம் என உறுதி பட கூறுவதற்கு துணிச்சல் அற்ற வராகத் தன்னை வெளிப்படுத்தி உள்ளார்

''பௌத்த - சிங்கள மக்களைப் பகைத் துக் கொள்ளாமல், தமிழர்கள் தலையில் மிளகாய் அரைக்க நினைக்கிறார் அநுர. தமிழர்கள் கோரும் சமஷ்டித் தீர்வு தொடர்பில் பேசக் கூடாது எனக் கூறும் அநுர, தான் வழங்க நினைக்கும் தீர்வை வெளிப்படையாகக் கூற முதுகெலும்பு அற்றவராக இருக்கின்றார். அத்துடன் ஏனைய சிங்கள கட்சித் தலைவர்களை விடத் தான் தந்திரமாகத் தமிழர்களை ஏமாற்றி விடுவேன் என மனப்பால் குடிக்கிறார்.

''தமிழர்களின் விடுதலைப் போராட்டத் தியாகம், அதன் அர்ப்பணிப்பு போன்ற வற்றை கொச்சைப்படுத்தும் வகையில் அநுரகுமார தான் ஆட்சிக்கு வந்தால் மூன்று வேளை உணவைப் பெற்றுத் தருவார் எனக் கிளிநொச்சியில் கூறியுள் ளார்.

''முள்ளிவாய்க்கால் இறுதிப் போரில் கிட்டத்தட்ட நான்கு மாதங்கள் உணவுப் பொருள்களை வன்னிக்குச் செல்ல விடாது ராஜபக்ஷ அரசாங்கம் தடுத்த போது, அவர்களுடன் இணைந்து துரோகம் இழைத்து விட்டு, இன்று அதே மக்களைப் பார்த்து மூன்று வேளை உணவை தருவோம் என கூறுவதற்கு பதவி ஆசை தானே காரணம்? '' - இப்படி சபா குகதாஸ் எழுப்பும் கேள்வி நியாயமானது.

'சோறா? சுதந்திரமா?' என்ற தேர்தல் கோஷ விடயத்தில் தமிழ் மக்களின் நிலைப்பாடு - பதில் - உரிமைக்கான விடுதலைப் போராட்டம் என்பதாகவே தெட்டத் தெளிவாக இருந்து வந்திருக் கின்றது.

அதனை அநுரகுமாரவின் கனடா விசிட்டின் போது அங்குள்ள புலம்பெயர் தமிழர் சமூகமும் நன்கு போதித்து - படிப்பித்து - அனுப்பும் என்று நம்பலாம்.



# ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் குழு யாழ். பல்கலைக் கழகத்துக்கு விஜயம்!

ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக் கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, ஆஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அண்மையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துக்கு உத்தியோகபூர்வ விஜயம் ஒன்றை மேற்கொண்டது.

இலங்கையில் ஆஸ்திரேலிய தேசிய பல்கலைக்கழகத்தின் தேசிய பாதுகாப்புக் கல்லூரி, ஆஸ்திரேலிய வெளியுறவு மற்றும் வாணிபத்துறை ஆகியன இணைந்து மேற்கொண்டுள்ள கடல்சார் வள மற்றும் கடலோரப் பாதுகாப்புத் தொடர்பான விழிப்புணர்வுத் திறன் மேம்பாட்டுச் செயற்றிட்டத்தின் தற்போதைய நிலைமை தொடர்பில் ஆராய்வதற்கும், ஆஸ்திரேலிய அரசின் உதவிகள் வழங்கப்படக் கூடிய இடங்களை அடையாளம் காணும் வகையிலும், கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய தூததரகத்தின் அரசியல் மற்றும பொருளாதாரத்துக்கான முதல் செயலாளர் கலாநிதி போல் செக்கோலா தலைமையிலான குழுவினரே கடந்த வாரம் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்துக்கு விஜயம் செய்து துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜா தலை மையிலான குழுவைச் சந்தித்தனர்.

இந்தச் சந்திப்பின் போது ஆஸ்திரேலிய அதிகாரிகள் குழுவில், தென் ஆசிய மற்றும் இந்து சமுத்திரக் கடற் பிராந்தியப் பாதுகாப்புசார் விற்பன்னரும், ஆஸ்திரேலிய தேசியப் பல்கலைக் கழக தேசிய பாதுகாப்புக் கல்லூரியின் சிரேஷ்ட ஆராய்ச்சியாளருமான கலாநிதி டேவிற் பிரேஸ்டர், ரோயல் ஆஸ்திரேலிய கடற்படையின் ஓய்வு பெற்ற அதிகாரியும், புதுதில்லியில் கடமையாற்றும் ஆஸ்திரேலிய பாதுகாப்பு ஆலோசகருமான கப்டன் சைமன் பேட்மன், கொழும்பிலுள்ள ஆஸ்திரேலிய உயர் ஸ்தானிகராலய பாதுகாப்பு ஆலோசகர் கேணல் அமெண்டா ஜோண்சன் மற்றும் ஆஸ்திரேலிய எல்லைப் பாதுகாப்புப் பிரிவைச் சேர்ந்த அத்தியட்சகர் வனேசா ரஃப் ஆகியார் அடங்கியிருந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் சார்பில், கலைப் பீடாதிபதி பேராசிரியர் சி. ரகுராம், அரசறிவியல் துறைத் தலைவர் பேராசிரியர் கே.ரி.கணேசலிங்கம் மற்றும் பொருளியல் துறைத் தலைவர் கலாநிதி (திருமதி) கே.கருணாநிதி ஆகியோரும் இதில் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்பின் போது தற்போதைய அரசியல், பொருளாதார நிலைமைகள் மற்றும் ஆஸ்திரேலிய அரசின் நலனோம்புத் திட்டங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டது. சட்ட விரோத புலம்பெயர்வு தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான சமூக மட்டச் செயற்றிட்டங்களை முன்னெடுப்பது தொடர்பிலும் ஆராயப்பட்டது.

# ‘வேள்வித் திருமகன்’ திருப்பாடுகளின் நாடகம் நாளை ஆரம்பமாகின்றது

திருமறைக் கலாமன்றம் ஆண்டு தோறும் கிறிஸ்தவர்களின் தவக்காலத்தில் தயாரித்து வழங்கும் மாபெரும் அரங்க ஆற்றுகையான திருப்பாடுகளின் நாடகம் இவ்வாண்டு ‘வேள்வித் திருமகன்’ என்னும் பெயரில் நாளை 21 ஆம் திகதி வியாழக்கிழமை முதல் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமைவரை நான்கு நாள்களுக்கு மாலை 6.45 மணிக்கு இல.238 , பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்ற அரங்கில் மேடையேற்றப்படவுள்ளது.

திருப்பாடுகளின் நாடக மரபில் தனக்கென்றொரு தனித்துவத்தை தக்கவைத்திருக்கும் திருமறைக் கலாமன்றம் இவ்வாற்றுகையை காலத்துக்கு ஏற்ற அரங்க நுட்பங்களைச் சிந்தனைகளை உள்வாங்கி புதிய புதிய பார்வைகளுடன் மேடையேற்றி வந்துள்ளது.

இந்த முறை மேடையேற்றப்படும் ‘வேள்வித் திருமகன்’ திருப்பாடுகளின் நாடகம் முதன் முதலாக 2012 ஆம் ஆண்டிலும் அதனைத் தொடர்ந்து 2014 ஆம், 2016 ஆம் ஆண்டுகளிலும் மேடையேற்றப்பட்டது.த ற்போது நான்காவது தடவையாக மேடையேற்றப்படுகின்றது.

.திருமறைக் கலாமன்றத்தின் ஸ்தாபக இயக்குநர் அமரர் நீ.மரியசேவியர் அடிகளார் திருப்பாடுகளின் நாடகப் பாரம்பரியத்தினை தமிழ் மரபுக்குரிய தனித்துவங்களுடன் வளர்த்து வந்துள்ளார். திருப்பாடுகளின் நாடகத்துக்கான பெரும்பாலான பிரதிகளை நீ.மரியசேவியர் அடிகளாரே எழுதியுள்ளார்.அவரால் இறுதியாக எழுதப்பட்ட பிரதியே’ வேள்வித் திருமகன்’ மரிய சேவியர் அடிகளாரால் எழுதப்பட்ட திருப்பாடுகளின் நாடகப் பிரதிகளில் இருந்து மொழிநடையிலும், பொருள் அளிக்கையிலும் சற்று மாறுபட்டதாக எழுதப்பட்ட இப்படைப்பு வேள்விக் கருவை மையப்படுத்திய தாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

வழமை போல் பிரமாண்டமான அரங்கஅமைப்பு, காட்சியமைப்பு, இசையமைப்பு, ஒலி, ஒளி போன்றவற்றுடன் அரங்கிலும், அரங்கப் பின்னணியிலுமாக இருநூறுக்கும் அதிகமான கலைஞர்கள் இவ்வாற்றுகையில் பங்கேற்கின்றார்கள்.



# சம்மாந்துறைக் கோட்டக்கல்வி அலுவலகம் புதுப்பொலிவுடன்!

(வி.ரி.சகாதேவராஜா)

சம்மாந்துறை வலயத்தில் உள்ள சம்மாந்துறை கோட்டக் கல்வி அலுவலகம் புதுப்பொலிவு பெற்றுவருகிறது.

சம்மாந்துறை வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானாவின் வழிகாட்டலில் கோட்டக் கல்விப்பணிப்பாளர் ஏ. நசீர் எடுத்த பெருமுயற்சியின் காரணமாக சம்மாந்துறைக் கோட்டக் கல்வி அலுவலகம் புதுப் பொலிவு பெற்றுள்ளது.

அங்கு ஒன்று கூடல் மண்டபம் ஏனைய மண்டபங்கள் மெருகூட்டப்பட்டுள்ளன.

கல்விசார் தகவல்கள் மிசன் விஷன் நவீன முறையில் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.



வலயக் கல்விப் பணிமனையின் புதன்கிழமை கல்வி அபிவிருத்தி கூட்டம் பரீட்சார்த்தமாக நடைபெற்றது.

இதன் திறப்புவிழா விரைவில் நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்மாந்துறை போல் நாவிதன்வெளி இறக்காமம் ஆகிய கோட்டங்களும் புதுப் பொலிவு பெற வேண்டும் என்று வலயக்கல்விப் பணிப்பாளர் டாக்டர் உமர் மௌலானா கேட்டுக்கொண்டார்.

இதற்காக ஒத்துழைத்த அனைவருக்கும் கோட்டக் கல்வி பணிப்பாளர் ஏ.நசீர் நன்றிகளை தெரிவித்துள்ளார்





# பைந்தமிழ் உறவுப்பாலம் மூலம் மண்டூர் மாணவருக்கு உதவிகள்

(வி.ரி.சகாதேவராஜா)

பைந்தமிழ் உறவுப்பாலம் வேலைத் திட்டத்தின் கீழ் மண்டூர் 14, சக்தி மகா வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்குப் புத்தகப்பைகள் உட்பட்ட 6 லட்சம் ரூபா பெறுமதியான கற்றல் உபகரணங்கள் கல்முனை றோட்டரிக் கழகத்தால் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வுக்குக் கல்முனை றோட்டரிக் கழகத் தலைவர் ஏ. எல். ஏ. நாசர் தலைமை தாங்கினார்.

பாடசாலை அதிபர் எஸ் .சௌசன், றோட்டரியன் மு.சிவபாதசுந்தரம், றோட்டரியன் எம் அமிர்தசங்கர் ஆகியோரும் பங்குபற்றினர்.

இதற்கான நிதி உதவி ஐக்கிய இராச்சியம் நியூமோல்டனிலுள்ள சறே தமிழ் கல்விக்கூடச் சமூகத்தால் வழங்கப்பட்டுள்ளது.அதன் முக்கிய பிரதிநிதி அரிராஜசிங்கம் மகீதரனும் நிகழ்வில் கலந்து கொண்டார்.

இதற்கான அனுசரணையை அசிஸ்ற் ஆர்ஆர் அமைப்பு வழங்கியுள்ளது.

# பண்டிகைக் காலக் கொடுப்பனவை 20 ஆயிரம் ரூபாவாக அதிகரிக்குக!

## அரச ஊழியர்க கோரிக்கை விடுத்துள்ளனர்.

(அபு அலா)

அரச ஊழியர்களுக்குக் கடந்த பல வருடங்களாக 10 ஆயிரம் ரூபா வீதம் வழங்கப்பட்டு வரும் பண்டிகைக்கால முற்பணத்தின் தொகையை 20 ஆயிரம் ரூபாவாக உயர்வாக வழங்கக்கோரி அரச ஊழியர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

நாட்டின் பொருளாதார நிலைமை நாளுக்கு நாள் மாற்றமடைந்து வருகின்ற நிலையில், கடந்த பல வருடங்களாக வழங்கப்பட்டு வரும் பண்டிகைக்கால முற்பணத்தொகை 10ஆயிரம் ரூபாவாகவே இன்றும் இருக்கின்றது.

தற்போதைய விலைவாசிகளைக் கருத்தில் கொண்டு இன்றைய அரசு அரச ஊழியர்களின் விடயங்களில் அதிக கவனம் செலுத்தி அவர்களின் வாழ்வாதாரத்துக்கு ஏற்ற வகையில் பண்டிகைக்காலக் கொடுப்பனவை வழங்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# இழப்பீடுகளுக்கான அலுவலகத்தால் நாவிதன்வெளியில் வாழ்வாதார உதவி

(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியல் மறுசீரமைப்பு அமைச்சின் இழப்பீடுகளுக்கான அலுவலகம் அம்பாறை மாவட்ட செயலகத்துடன் இணைந்து நம்பிக்கைக்கான நூல் மற்றும் வாழ்க்கைக்கான வெளிச்சம் திட்டத்தின் கீழ் ஏற்பாடு செய்த வாழ்வாதார உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கி வைக்கும் நிகழ்வு நாவிதன் வெளி பிரதேச செயலகத்தில் இன்று (19) நடைபெற்றது.



பிரதேச செயலாளர் ஆர். ராகுல நாயகியின் வழிகாட்டலுக்கு அமைய உதவி பிரதேச செயலாளர் பி. பிரணவருபன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், அம்பாறை மாவட்ட மேலதிக அரச அதிபர் வி.ஜெகதீசன் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நீதி அமைச்சின் இழப்பீடுகளுக்கான பணிப்பாளர் அனுராதி பெரேரா, பிரதி திட்டமிடல் பணிப்பாளர் திருமதி கிருபைராஜா திலகராணி, மாவட்ட இழப்பீட்டுக்கான உத்தியோகத்தர் எம்.ஆர். ஆஸாத் உட்பட பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் பலரும் இதில் கலந்து கொண்டனர்.

நிகழ்வின் போது, கைத்தறி நெசவு உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் நெசவு உற்பத்திக்கு தேவையான மூலப் பொருள்கள் மற்றும் பயிற்சிகள் வழங்கப்பட்டன. மெழுகுவர்த்தி உற்பத்தி செய்வதற்காக தெரிவு செய்யப்பட்ட பயனாளிகளுக்கு பயிற்சிகள் மற்றும் உற்பத்தி இயந்திரங்கள் என்பனவும் வழங்கப்பட்டன.

# உலக காசநோய் தினம் சாய்ந்தமருதில் அனுஷ்டிப்பு

(எம்.எஸ்.எம்.ஸாகிர்)

உலக காசநோய் தினத்தை அனுஷ்டிக்கும் முகமாக கல்முனை பிராந்திய மார்பு நோய் சிகிச்சை நிலையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள காச நோய் தொடர்பான நடை பவனி விழிப்புணர்வு நிகழ்வொன்று எதிர்வரும் 23 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு சாய்ந்தமருதில் இடம்பெறவுள்ளது.

காசநோய் சம்பந்தமாகவும், சமூகத்தில் காசநோயைக் கட்டுப்படுத்துவதற்காக முன்னெடுக்கப்படவேண்டிய செயற்பாடுகள் தொடர்பாகவும் மக்களுக்கு மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு செயற்பாடாக இது இடம்பெறவுள்ளது.

"காசநோயற்ற கல்முனை பிராந்தியத்தை உருவாக்குவோம்" எனும் தொனிப் பொருளில் சாய்ந்தமருது – மாளிகைக்காடு ஜும்ஆப் பள்ளிவாசலின் முன்பாக ஆரம்பித்து சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையில் நடைபவனி முடிவடையவுள்ளது.






# பல்கலைக்குத் தெரிவான மாணவர்கள் கௌரவிப்பு

**(அஸ்ஹர் இப்றாஹிம்)**

யாழ்ப்பாணம் புனித பற்றிக்ஸ் கல்லூரியில் கல்வி கற்று சிறந்த பெறுபேறுகளைப் பெற்று பல்கலைக்கழக அனுமதியைப் பெற்ற சுமார் 25 மாணவர்கள் பழைய மாணவர் சங்கத்தினரால் பதக்கம் அணிவிக்கப்பட்டு, பணமுடிச்சு வழங்கி கல்லூரிப் புனிதர் தினத்தில் கௌரவிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வின் தொடக்கத்தில் பழைய மாணவர் சங்க கொடியை கல்லூரி அதிபரும் , யாழ்ப்பாண பழைய மாணவர் சங்க தலைவருமாகிய அருட் திரு ஏ.பி.திருமகன் அடிகளார் ஏற்றி வைத்தார்.

முதல் நிகழ்வாக புதிதாக பல்கலைக் கழக அனுமதியைப் பெற்ற மாணவர்களுக்கும் பழைய மாணவர்களுக்கும் இடையே சிநேக பூர்வ ரி -10 கிறிக்கெட் போட்டி நடைபெற்றது.

இந்த நிகழ்வில் கல்லூரி ஆசிரியர்கள், பெற்றோர்கள், கொழும்பு பழைய மாணவர் சங்கத் தலைவர், செயலாளர் மற்றும் கல்லூரியில் கற்று புலம்பெயர் தேசங்களில் இருந்து கல்லூரிக்கு வருகை தந்த பழைய மாணவர்கள் உட்பட பல பழைய மாணவர்கள் , கல்லூரி நலன் விரும்பிகள் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வை ஒவ்வொரு ஆண்டும் கல்லூரி தினத்தில் யாழ்ப்பாண பழைய மாணவர் சங்கத்தினர் முன்னெடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.



# யோகர் சுவாமிகளின் குருபூசை!



நிகழும் சோபகிருது வருடம் பங்குனி ஆயிலிய நாள் நாளை (21) வியாழக்கிழமை யோகர் சுவாமிகளின் குருபூசைநாள்.

முற்பகல் 09.30 மணி முதல் சிவ தொண்டன் நிலையத்துப் புராண மண்டபத்தில் யோகர் சுவாமிகளது திருமேனிக்கு திவ்யமான அபிஷேக ஆராதனை நிகழும். நண்பகல் மாகேஸ்வர பூசை நிகழும்.

சிவதொண்டன் நிலையத்தில் குருபூசைக்கு முந்திய மூன்று நாள்களும் வழமை போன்று ஆச்சிரம வாழ்வு நாள்களாக அனுஷ்டிக்கப்படும். இந்த நாள்களில் நற்சிந்தனை முற்றும் ஓதி நிறைவு செய்யப்படும்.

இந்த நிகழ்வுகளில் எல்லாம் அன்பர்களைக் கலந்து கொள்ளுமாறு சிவதொண்டன் சபையினர் கேட்டுள்ளனர்.






# மன்னார் சீது விநாயகர்புரத்துக்கு அரசாங்க அதிபர் நேரடி விஜயம்!

## மக்கள் அரச அதிபரிடம் பல்வேறு கோரிக்கைகள் முன்வைப்பு

**(மன்னார் செய்தியாளர்)**

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் மிகவும் பின்தங்கிய கிராமங்களில் ஒன்றான கூராய் சீது விநாயகர்புரம் கிராமத்துக்கு மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரன் நேரடியாக சென்று கிராமத்தை சுற்றி பார்வையிட்டு அந்த கிராமத்து மக்களின் தேவைகளைக் கேட்டறிந்தார்.

இந்த நிகழ்வு கிராம சேவையாளர் சி.ஸ்ரீஸ்கந்தராஜா தலைமையில் நேற்று செவ்வாய்க்கிழமை (19) மாலை இடம் பெற்றுள்ளது.

இதன் போது கருத்து தெரிவித்த பொது மக்கள்,

தங்கள் கிராமத்தில் உள்ள வீதிகள் மற்றும் குடி தண்ணீர் பிரச்சினைகள் நீண்ட காலமாகத் தீர்க்கப்படாமல் உள்ளன. கிராமத்தில் இருந்து 20 கிலோ மீற்றர் தூரம் சென்றே மருத்துவம், கல்வி மற்றும் அன்றாட தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய சூழ்நிலை உள்ளது.

பிரதான வீதிக்கு செல்வதற்கு முன்னதாக உள்ள சுமார் நான்கு கிலோ மீற்றர் தூரமான வீதி பாரிய குன்றும், குழியுமாக காணப்படுகிறது.

மழை காலங்களில் இந்தக் குளக் கட்டு வீதி முற்றிலும் பாவிக்க முடியாதவாறு காணப்படும். இரவு நேரங்களில் விஷப் பூச்சிகள் கடித்தால் அல்லது கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஏற்படும் பிரசவ வலி போன்ற அவசர தேவைகளுக்கு இந்த வீதிகள் பயன்படுத்த முடியாத நிலை காணப்படுகிறது.

இங்குள்ள மக்கள் அனைவரும் விவசாயத்தையும் தோட்டப் பயிர்ச் செய்கையையும் நம்பி வாழ்பவர்கள். அவர்களால் உற்பத்தி செய்யப்படும் பொருள்களை வியாபாரம் செய்வதற்கான போக்குவரத்து வசதிகள் இல்லை. இதனால் மிகவும் பாடுபட்டு உற்பத்தி செய்யப்படும் மரக்கறி வகைகளை லாபம் எதுவும் இல்லாமல் குறைந்த விலைகளில் கொடுக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளோம்.

அத்துடன் தோட்டங்கள் செய்யும் இடங்களில் வனவளப் பிரிவினரின் பிரச்சினை இருக்கிறது. இதையும் மாவட்டச் செயலாளரின் கவனத்துக்குக் கொண்டு வருகிறோம். எனவே எமது கிராமத்துக்கு மிகவும் அவசர தேவையாக உள்ள வீதியைச் செப்பனிட்டு, போக்குவரத்து மற்றும் குடி தண்ணீர் பிரச்சினைகளைத் தீர்த்து வைத்தால் விவசாயம் மற்றும் தோட்டப் பயிர் செய்கைகள் மூலம் எமது வாழ்வாதாரத்தைச் சிறந்த முறையில் கொண்டு செல்ல முடியும்.-என்றனர்.

கிராமத்து மக்களின் குறைகளைக்க கேட்டறிந்த அரச அதிபர் குழுவினர், அங்குள்ள பாடசாலை, வீதிகள், குளங்கள், தோட்டக் காணிகள் போன்றவற்றைப் பார்வையிட்டனர். இவற்றுக்கான தீர்வுகள் விரைவில் பெற்றுத் தருவதாக இதன்போது அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில் உதவி அரச அதிபர்கள், மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் டி.சி.அரவிந்தராஜ் , மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள், கிராமங்களின் பொது மக்கள் மற்றும் இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.







# அ.தி.மு.கவுடன் தே.மு.தி.க. கூட்டணி; 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன



மக்களவை தேர்தலில் அ.தி.மு.க. – தே.மு.தி.க. கூட்டணி உறுதியாகியுள்ளது. தே.மு.தி.கவுக்கு 5 தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி தெரிவித்துள்ளார்.

மக்களவை தேர்தல் 2024 இற்கான அ.தி.மு.க. முதற்கட்ட வேட்பாளர் பட்டியலை இன்று சென்னை ராயப்பேட்டையில் உள்ள அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அக்கட்சியின் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டார். இதில் 16 வேட்பாளர்கள் இடம்பெற்றுள்ளனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தே.மு.தி.கவுக்கு ஐந்து தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என தெரிவித்தார்.

மேலும் புதிய தமிழகம், எஸ்.டி.பி.ஐ. ஆகிய கட்சிகளுக்கு தலா ஒரு தொகுதி ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

நீண்ட நாள்களாக கூட்டணி தொடர்பாக தே.மு.தி.க. – அ.தி.மு.க. இடையே பேச்சு நீடித்துவந்த நிலையில், இன்று அக்கட்சிக்கு 5 தொகுதிகள் ஒதுக்கியுள்ளன என இ.பி.எஸ். அறிவித்துள்ளார்.

தே.மு.தி.கவுக்கு எந்தெந்த தொகுதிகள் ஒதுக்கப்பட்டுள்ளன என்பது குறித்த தகவல்கள் இன்னும் வெளியாகவில்லை.

# 11 புதுமுகங்களுக்கு வாய்ப்பு: தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்பு



மக்களவைத் தேர்தலில் தி.மு.க. சார்பில் 21 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் விவரங்களை அக்கட்சியின் தலைவரும் தமிழக முதல்வருமான மு.க.ஸ்டாலின் அறிவித்தார். இதில் புதிய வேட்பாளர்களாக 11 பேர் அறிவிக்கபட்டுள்ளனர்.

தமிழகத்தின் 39 தொகுதிகள் மற்றும் புதுச்சேரி தொகுதிக்கு ஒரே கட்டமாக வரும் ஏப்ரல் 19 ஆம் திகதி மக்களவை தேர்தல் வாக்குப்பதிவு நடைபெற உள்ளது. தமிழகத்தில் தி.மு.க, அ.தி.மு.க, பா.ஜ.க. தலைமையில் பல்வேறு கட்சிகள் இணைந்து தேர்தலை சந்திக்கின்றன. வேட்புமனு தாக்கல் இன்று தொடங்கியுள்ளது.

முதன்முதலாக கூட்டணி பேச்சு வார்த்தையைத் தொடங்கிய தி.மு.க, கூட்டணி கட்சிகளுக்கு உரிய இடங்களை ஒதுக்கி தொகுதி பங்கீட்டையும் முதலில் நிறைவு செய்தது. தி.மு.கவை பொருத்தவரை, 21 தொகுதிகளில் நேரடியாக களம்காண்கிறது.

தி.மு.க. கூட்டணியில் ஏற்கெனவே வி.சி.கவுக்கு சிதம்பரம், விழுப்புரம் ஆகிய தொகுதிகளும், இந்திய கொம்யூனிஸ்ட் கட்சிக்கு நாகை, திருப்பூர் தொகுதிகளும், மார்க்சிஸ்ட் கட்சிக்கு மதுரை, திண்டுக்கல் தொகுதிகள், ஐ.யூ.எம்.எல். கட்சிக்கு இராமநாதபுரம், கொங்குநாடு மக்கள் தேசிய கட்சிக்கு நாமக்கல் தொகுதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

காங்கிரஸ் மற்றும் ம.தி.மு.கவுக்கு தொகுதிகள் ஒதுக்கீடு செய்ததன் மூலம் தி.மு.க. நேரடியாக 21 தொகுதிகளில் போட்டியிடுகிறது.

தி.மு.க சார்பில் 21 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்கள் விவரங்களை ஸ்டாலின் இன்று அறிவித்தார்.

புதிய வேட்பாளர்களாக 11 பேர் அறிவிக்கப்பட்டுள்ளனர். 3 பெண்களுக்கு வாய்ப்பு அளிக்கப்பட்டுள்ளன. அதேபோல் வேட்பாளர்கள் பட்டியலில் 6 வழக்கறிஞர்கள், 2 முனைவர்கள் இடம்பெற்றுள்ளனர். மேலும் 2 மருத்துவர்கள், 19 பட்டதாரிகள் இடம்பெற்றுள்ளனர்.

வாரிசுகள் அடிப்படையில் பார்த்தால் எதிர்பார்க்கப்பட்டதுபோலவே அமைச்சர் நேருவின் மகன் அருண் நேரு பெரம்பலூர் தொகுதியில் போட்டியிடுகிறார். வேலூர் தொகுதியில் அமைச்சர் துரைமுருகனின் மகன் கதிர் ஆனந்தத்துக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இவர்கள், தவிர கனிமொழி, கலாநிதி வீராசாமி, தயாநிதி மாறன், தமிழச்சி தங்கபாண்டியன் ஆகியோர் மீண்டும் வாய்ப்பு பெற்றுள்ளனர்.

# இலங்கை கடற்படையினரின் அத்துமீறலுக்கு முற்றுப்புள்ளி

## மத்திய அரசுக்கு கமல்ஹாசன் வலியுறுத்தல்



தமிழக மீனவர்கள் மீதான இலங்கை கடற்படையின் தொடரும் அத்துமீறல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என மத்திய அரசுக்கு மக்கள் நீதி மய்யம் கட்சித் தலைவர் கமல்ஹாசன் வலியுறுத்தியுள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட அறிக்கையில்,

“தமிழக மீனவர்கள், இலங்கை கடற்படையினரால் தொடர்ந்து கைது செய்யப்படுவதும், இதை மத்திய அரசு வேடிக்கை பார்த்துக் கொண்டிருப்பதும் மிகுந்த வேதனையை உண்டாக்குகிறது. பன்னெடுங்காலமாக மீன்பிடிக்க அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் தமிழக மீனவர்கள் மீன் பிடித்தாலும் கூட எல்லை தாண்டி வந்ததாக இலங்கை கடற்படையினர் கைது செய்கின்றனர்.

கடந்த 2 மாதங்களில் மட்டும் 80 இற்கும் மேற்பட்ட மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர். மேலும், சமீபகாலமாக கைது செய்யப்படும் மீனவர்களுக்கு மாதக்கணக்கில் சிறை தண்டனைவிதிப்பதும் தொடங்கியுள்ளது. இது இந்திய இறையாண்மைக்கு விடப்பட்ட சவாலாகும். கைதுசெய்யப்பட்ட மீனவர்கள் விடுவிக்கப்பட்டாலும், அவர்களது படகுகளை விடுவதில்லை. இதனால் வாழ்வாதாரம் இழந்து தமிழக மீனவர்கள் பரிதவிக்கின்றனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்கள் கைது செய்யப்படும் விவகாரத்துக்கு நிரந்தரத் தீர்வு காண பல அரசியல் கட்சிகள் வலியுறுத்தியும் தமிழகத்தை மத்திய அரசு தொடர்ந்து புறக்கணித்து வருகிறது. இந்தப் போக்கு தொடருமானால் மத்தியஅரசுக்கு தமிழர்கள் தக்க பாடம் புகட்டுவர். எனவே, இலங்கை கடற்படையினரின் அத்துமீறல்களுக்கு போர்கால அடிப்படையில் நடவடிக்கை எடுத்து மத்திய அரசு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும்.” - என்று குறிப்பிட்டுள்ளார்.

# வேட்பாளர்களை ஒரே மேடையில் அறிமுகப்படுத்துகின்றார் சீமான்



மக்களவைத் தேர்தலையொட்டி நாம் தமிழர் கட்சி சார்பில் 40 தொகுதிகளில் போட்டியிடும் வேட்பாளர்களை, கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான், ஒரே மேடையில் அறிமுகப்படுத்தும் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி சென்னையில் நடை பெறவுள்ளது.

இதுதொடர்பாக கட்சி தலைமையகம் வெளியிட்ட அறிக்கையில்,

“நாம் தமிழர் கட்சி சார்பாக தேர்தலில் போட்டியிட உள்ள 40 வேட்பாளர்களை, ஒரே மேடையில் அறிமுகப்படுத்தும் பொதுக்கூட்டம் சென்னையில் பிரம்மாண்டமாக நடைபெற உள்ளது. கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் நிகழ்வுக்கு தலைமை வகித்து வேட்பாளர்களை அறிமுகம் செய்து வைக்கிறார்.

அதன்படி மக்களவைத் தேர்தலுக்கான வேட்பாளர் அறிமுகப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 23 ஆம் திகதி மாலை 5 மணிக்கு, சென்னை கோவிலம்பாக்கம், துரைப்பாக்கம் - பல்லாவரம் ரேடியல் சாலையில் உள்ள காவேரி மருத்துவமனை அருகே நடைபெற உள்ளது.

முன்னதாக பிரச்சாரத்துக்கான களப்பணிகளை திட்டமிட்டு ஒருங்கிணைப்பதற்காக போட்டியிட இருக்கும் 40 வேட்பாளர்கள் மற்றும் தொகுதிவாரியாக நியமிக்கப்பட்டுள்ள பொறுப்பாளர்கள் உடன் கலந்தாய்வு கூட்டம் சென்னை அண்ணாநகரில் நாளை காலை 10 மணிக்கு நடைபெறுகிறது.” - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# சரக்கு கப்பல், பணியாளர்கள் மீட்பு: மோடிக்கு பல்கேரிய ஜனாதிபதி நன்றி




சோமாலிய கடல் கொள்ளையர்களிடம் இருந்து சரக்கு கப்பல் மற்றும் அதன் பணியாளர்கள் மீட்கப்பட்டதற்கு பிரதமர் நரேந்திர மோடிக்கு பல்கேரியா அதிபர் ரூமென் ராதேவ் நன்றி தெரிவித்துள்ளார்.

மால்டா நாட்டு கொடியுடன் சென்ற எம்.வி.ரூயென் என்ற சரக்கு கப்பலை சோமாலிய கடற்கொள்ளையர்கள் கடந்த ஆண்டு டிசம்பர் 14 ஆம் திகதி கடத்திச் சென்றனர்.

கடந்த 3 மாதங்களாக அதனை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருந்தனர். இந்த நிலையில் இந்திய கடற்படையின் ஐ.என்.எஸ். கொல்கத்தா போர்க்கப்பல், கடந்த சனிக்கிழமை ரூயென் சரக்கு கப்பலையும் அதன் 17 ஊழியர்களையும் பத்திரமாக மீட்டது. சுமார் 40 மணி நேர நடவடிக்கைக்கு பின்னர் இந்த கப்பலும் அதன் பணியாளர்களும் மீடகப்பட்டனர்.

மேலும் சோமாலிய கொள்ளையர்கள் 35 பேரை இந்திய கடற்படை சரணடையச் செய்தது. இதற்கு பிரதமர் நரேந்திர மோடிக்கு பல்கேரிய ஜனாதிபதி ரூமென் ராதேவ் நன்றி தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"கடத்தப்பட்ட பல்கேரிய கப்பல் மற்றும் 7 பல்கேரிய குடிமக்கள் உள்ளிட்ட அதன் பணியாளர்களை மீட்டஇ ந்திய கடற்படையின் துணிச்சலான நடவடிக்கைக்காக பிரதமர் நரேந்திர மோடிக்கு எனது மனமார்ந்த நன்றி" என்று கூறியுள்ளார்.

முன்னதாக பிரதமர் மோடிக்கு பல்கேரியாவின் துணை பிரதமரும் வெளியுறவு அமைச்சருமான மரியா கேப்ரியேல் கடந்த ஞாயிற்றுக்கிழமை நன்றி தெரிவித்தார். இதற்கு வெளியுறவு அமைச்சர் எஸ்.ஜெய்சங்கர் அளித்த பதிலில், அதுதான் நண்பர்கள் என்று கூறியிருந்தார்.



# புட்டின் மே மாதம் சீனாவுக்கு விஜயம்

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின், எதிர்வரும் மே மாதம் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

ரஷ்யாவின் ஜனாதிபதியாக விளாடிமிர் புட்டின் தெரிவு செய்யப்பட்டதன் பின்னர் அவர் சீனாவுக்கு விஜயம் மேற்கொள்ளும் முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும்.

ரஷ்ய ஜனாதிபதியாக அவர் மீண்டும் தெரிவு செய்யப்பட்டமை நியாயமற்றது எனவும் ஜனநாயகமற்றது என மேற்குலக நாடுகள் அதிருப்தி வெளியிட்டுள்ளன.

எவ்வாறாயினும் சீனா, இந்தியா மற்றும் வட கொரியா உள்ளிட்ட நாடுகள் ரஷ்ய ஜனாதிபதிக்கு தங்களது வாழ்த்துக்களை தெரிவித்துள்ளன.

இந்த நிலையில், எதிர்வரும் மே மாதத்தின் நடுப்பகுதியில் விளாடிமிர் புட்டின் சீனாவிற்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.



# இஸ்ரேலின் தாக்குதல் ஹமாஸ் அமைப்பின் 3 ஆவது உயர் தலைவர் மர்வான் இஸா பலி

ஹமாஸ் அமைப்பின் 3 ஆவது உயர் தலைவரான மர்வான் இஸா, இஸ்ரேலின் தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளார் என தெரிவிக்கப்படுகிறது.

மர்வான் இஸா கடந்த வாரம் இஸ்ரேலின் தாக்குதலால் கொல்லப்பட்டுள்ளார் என வெள்ளை மாளிகை வெளியிட்ட அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மர்வான் இஸா ஹமாஸின் இராணுவப் பிரிவான இஸ்ஸதீன் அல் கஸ்ஸாம் படையணியின் பிரதித் தலைவராக விளங்கியவர்.

மார்ச் 9, 10 ஆம் திகதிகளில் இஸாவை இலக்குவைத்து காஸாவில் தாக்குதல் நடத்தப்பட்டதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளர் ரியர் அட்மிரல் டேனியர் ஹகாரி கடந்த 11 ஆம் திகதி கூறியிருந்தார்.

எனினும், அந்த நடவடிக்கையில் இஸா கொல்லப்பட்டாரா என்பது தெளிவில்லை என தெரிவிக்கப்பட்டது.




இந்நிலையில், கடந்த வாரம் இஸ்ரேலின் தாக்குதலில் இஸா கொல்லப்பட்டுள்ளார் என அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் ஜக் சுலீவன் தெரிவித்துள்ளார்.

# இ-சிகரெட்டுக்கு நியூசிலாந்தில் தடை

நியூசிலாந்தில் இ – சிகரெட்டை பயன்படுத்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

நியூசிலாந்து அரசாங்கத்தினால் இந்த தடை விதிக்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

அத்துடன், 18 வயதுக்குட்பட்டோருக்கு இ- சிகரெட்டினை விற்பனை செய்தால் அவர்களுக்கு அபராதம் விதிக்கப்படும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

உலகின் பல நாடுகள் தற்போது இ – சிகரெட்டைப் பயன்படுத்த தடை விதித்து வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது.



பக்கங்கள் - 4
கனடா முரசு
புதன்கிழமை 20/03/2024

## 2023 இல் கனடாவில் காற்றின் தரம் அமெரிக்காவை விட மிக மோசமாம்!

ஒன்ராரியோ, மார்ச் 20

2023ஆம் ஆண்டில் அமெரிக்காவை விட கனடாவின் காற்றின் தரம் மிகவும் மோசமானதாக இருந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

C2

# வீடமைப்பு கொள்கைகள் தொடர்பில் மத்திய அரசின் தேர்ச்சி மந்த கட்டமே!

## வெளியாகிய புதிய அறிக்கையில் தகவல்



ஒன்ராரியோ, மார்ச் 20

மத்திய அரசாங்கமானது முதல் தேசத்தவர்களுக்கான வீடமைப்பு மற்றும் கொள்கைகள் தொடர்பில் குறைந்தளவு தேர்ச்சியையே காட்டுவதாக வெளிவந்துள்ள இரு புதிய அறிக்கைகளைத் தொடர்ந்து, அரசாங்கத்தில் அடிப்படை மாற்றங்கள் நிகழ வேண்டும் என மத்திய கணக்காய்வாளர் நாயகம் தெரிவித்துள்ளார்.

வீடமைப்பு, பாதுகாப்பு, பாதுகாப்பான குடிதண்ணீர் அல்லது ஏனைய முக்கிய விடயங்கள் தொடர்பில் மீண்டும், மீண்டும் அரசாங்கத்தின் நிகழ்ச்சிகள் தோல்வியடைந்து வருகின்றமையை அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன எனக் கணக்காய்வாளர் நாயகம் கரன் ஹோகன் தெரிவித்துள்ளார்.

தேர்ச்சி இன்மை என்பது முதல் தேசத்தவர்கள் மீது அரசாங்கத்தின் முழுமையான அக்கறையீனத்தையே வெளிப்படுத்துவதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

அரசாங்கத்தின் கொள்கைகளின் மோசமான நடைமுறைப்படுத்தல் மற்றும் முகாமைத்துவம் என்பனவே இதற்கான காரணம் என ஹோகன் தெரிவித்துள்ளார்.

# கெலிடானில் வாகன விபத்து இருவர் சாவு; ஒருவர் காயம்!




ஒன்ராரியோ,மார்ச்20

கெலிடானில் மார்ச் 19ஆம் திகதி (நேற்று) இரவு இரண்டு வாகனங்கள் மோதி இடம்பெற்ற விபத்தில் இருவர் உயிரிழந்தனர்.

இந்த விபத்து ஓல்ட் பேஸ் லைன் வீதிக்கு அருகில் உள்ள நெடுஞ்சாலை 10இல் இடம்பெற்றுள்ளது.

வாகனம் ஒன்றின் சாரதியும் பயணியும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

மற்றைய வாகனத்தின் சாரதி ஆபத்தான நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவில்லை.



# பொதுநிறுவனம் தொடர்பில் சசகெச்சுவானில் விசாரணை

சசகெச்சுவான்,மார்ச்20

சசகெச்சுவானில் 74 முதல் தேசக் குடிகளைப் பிரதிநிதித்துவம் செய்யும் நிறுவனம் ஒன்றின் மீது தடயவியல் பரிசோதனை செய்யவுள்ளதாக கனடிய பூர்வீகக் குடிகள் சேவைப் பிரிவு தெரிவித்துள்ளது.

இந்த அமைப்புக்கு எதிரான முறைப்பாடுகள் குறித்து தமக்கு தெரியுமென்றும், தற்போது இந்த அமைப்பு மீதான விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனவும், மார்ச் 19ஆம் திகதி வெளியான அறிக்கையில், கனடாவின் பூர்வீகக் குடிகள் சேவைப் பிரிவு குறிப்பிட்டுள்ளது.

பொது நிதியின் துஷ்பிரயோகம் தொடர்பில் தமது திணைக்களம் தீவிர கவனம் செலுத்தி, தக்க நடவடிக்கை எடுக்கும் என இந்த அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்கள் மற்றும் முறைப்பாடுகள் சரியான முறையில் விசாரிக்கப்பட்டு, பொருத்தமான நடவடிக்கைகள் எடுக்கப்படுவதனை தமது திணைக்களம் உறுதி செய்யும் என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.



## முன்னாள் சட்டமாஅதிபர் ரோய் மெக்முர்ட்ரி மறைவு

ஒன்ராரியோ, மார்ச் 20


ஒன்ராரியோ மாநிலத்தின் முன்னாள் சட்டமாஅதிபர் ரோய் மெக்முர்ட்ரி காலமானார்.

கன்சர்வேட்டிவ் ஆட்சியில் ஒன்ராரியோ மாநில அரசாங்கத்திற்கு 1975ஆம் ஆண்டு தெரிவான மெக்முர்ட்ரி, 1985ஆம் ஆண்டு வரை ஒன்ராரியோ மாநில சட்டமா அதிபராக பதவி வகித்தார்.

இதற்கு முன்னர், அவர் 17 வருடங்கள் சட்டத்தரணியாக இருந்தமை குறிப்பிடத்தக்கது.

சட்டமாஅதிபராக இருந்த காலத்தில் நீதிமன்றங்களில் இருமொழி உட்பட நீதி அமைப்பில் பல சீர்திருத்தங்களை அவர் மேற்பார்வையிட்டார்.

மனித உரிமைகளுக்கான முக்கிய செயற்பாட்டாளராகவும், கறுப்பின சமூகம் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கு குரல் கொடுப்பவராகவும் காணப்பட்டார்.




## வருடாந்தப் பணவீக்க வீதம் கனடாவில் குறைவடைந்தது

ஒன்ராரியோ, மார்ச் 20

பெப்ரவரி மாதத்தில் கனடாவின் வருடாந்த பணவீக்க வீதம் குறைவடைந்துள்ளது.

மளிகைப் பொருள்கள் மற்றும் கைபேசி கட்டணங்களிற்கான நிவாரணத்தின் மத்தியில் இந்த வீழ்ச்சி பதிவாகியுள்ளதாக கனடாவின் புள்ளிவிவரவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

கனடாவின் மத்திய வங்கியின் இரண்டு சதவீத இலக்கின் மத்தியில், பணவீக்கம் சிறிது மந்தமான தாக்கத்தைக் கொண்டிருக்கும் என பொருளியலாளர்கள் எதிர்வுகூறியுள்ள போதிலும், பொருள்களின் விலைகளில் ஒரு ஸ்திரமான நிலை பதிவாகியுள்ளது.

ஜனவரி மாதத்தில் 2.9 சதவீதமாக இருந்த பணவீக்கம், பெப்ரவரி மாதத்தில் 2.8 சதவீதமாக பதிவாகியிருந்தது.

### 2023இல் கனடாவில்...

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

சுவிட்ஸர்லாந்தைத் தலைமையகமாகக் கொண்ட நிறுவனத்தினால் வெளியிடப்பட்ட தரவுகளுக்கு அமைய, காட்டுத்தீயின் காரணமாக 2023ஆம் ஆண்டில் கனடாவின் காற்றின் தரம் மிகவும் மோசமடைந்திருந்ததாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு முதல் இந்த நிறுவனத்தால் உலக நாடுகளின் காற்றின் தரம் குறித்த வருடாந்த அறிக்கை வெளியாகி வருகின்றது.

உலகளவில் குறைந்த மாசடைந்த நாடாக கனடா இருக்கின்ற போதிலும், தீவிரமடைந்து வரும் காட்டுத்தீயின் காரணமாக ஏற்படக் கூடிய உடல்நலக் குறைபாடுகள் குறித்து இந்த அறிக்கை எச்சரித்துள்ளது.

காற்றின் மாசு என்பது அமைதியான கொலையாளி என டொரன்டோ பல்கலைக்கழக துணைப் பேராசிரியர் ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.



# கட்சியுடன் முரண்படுகிறார் கியூபெக்கின் லிபரல் எம்.பி.

கியூபெக்,மார்ச்20

கியூபெக்கின் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினரான அந்தோனி ஹவுஸ் பாதர் கட்சியுடனான தமது எதிர்காலம் குறித்து சிந்திக்க வேண்டியுள்ளதாக தெரிவித்துள்ளார்.

புதிய ஜனநாயகக் கட்சியினால் கொண்டு வரப்பட்ட பலஸ்தீனத்தை தேசமாக அங்கீகரிக்கும் பிரேரணை பல்வேறு திருத்தங்களுடன் மார்ச் 18ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

இதன்போது, எதிர்த்து வாக்களித்த மூன்று லிபரல் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்களில் அந்தோனி ஹவுஸ் பாதரும் ஒருவராவார்.

முன்னாள் பொது பாதுகாப்பு அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான மார்கோ மென்டிசினோ மற்றும் மனிடோபா நாடாளுமன்ற உறுப்பினரான பென் கர் ஆகியோரே இந்த பிரேரணைக்கு எதிராக வாக்களித்த ஏனைய இரண்டு லிபரல் கட்சி உறுப்பினர்களாவர்.

இவர்கள் இருவரும் தமது கட்சி அரசியல் குறித்து எவ்வித கருத்தினையும் இதுவரை வெளியிடாத நிலையில், தமது அரசியல் வாழ்வில் முதன்முறையாக லிபரல் கட்சியுடன் தொடர்ந்து பயணிப்பது தொடர்பில் சிந்திக்க நேர்ந்துள்ளதாக ஹவுஸ்பாதர் குறிப்பிட்டுள்ளார்.

# ஒன்ராரியோவில் வாகனக் களவு சந்தேகநபரின் சகோதரி கைது






ஒன்ராரியோ, மார்ச் 20

ஒன்ராரியோவில் வாகனத் திருட்டு சம்பவங்களின் சந்தேகநபரின் சகோதரியை பொலிஸார் கைது செய்துள்ளனர்.

சேர்விஸ் ஒன்ராரியோவில் உள்ள குறைபாடுகளைப் பயன்படுத்தி வாகனத் திருட்டில் ஈடுபட்ட சந்தேகநபருக்கு இவர் உடந்தையாகவிருந்தார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனால் இவர் மீது குற்றத்திற்கு உடந்தையாக இருந்தமைக்கான குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

25 வயதான இந்தப் பெண்மணி பிறம்டனில் வைத்து கைது செய்யப்பட்டார் என பீல் பிராந்திய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கியூபெக் அரசுடன் தாதியர் சங்கம் ஐந்து வருட கூட்டு உடன்படிக்கை

கியூபெக், மார்ச் 20

கியூபெக் மாநிலத்தின் பிரதான தாதியர் சங்கமானது மாநில அரசாங் கத்துடன் ஐந்து வருட உடன்படிக்கை ஒன்றுக்கு வந்துள்ளது.

கியூபெக் மாநில அரசாங்கத்திற்கும், தாதியர் தொழிற்சங்கத்திற்கும் இடை யில் 15 மாதங்களாக தொடர்ந்து இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்தே இந்த இணக்கப்பாடு எட் டப்பட்டிருக்கின்றது.

இந்த உடன்படிக்கை தொடர்பில் தொழிற்சங்கத்தின் உறுப்பினர்களுடன் கலந்துரையாடிதன் பின்னரே பகி ரங்கமாக அறிவிக்கப்படும் என தொழிற் சங்கத்தின் தலைவரும், கியூபெக் தி றைசேரி சபையின் தலைவருமான சோனியா லெபெல் கூறியுள்ளார்.

இந்த புதிய உடன்படிக்கையானது 80,000 தாதியர்களுக்கு பயனளிக்கும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த வருடத்தின் ஆரம்பத்தில் 420,000 பொதுத் துறை ஊழியர் களும், 66,000 ஆசிரியர்களும் அர சாங்கத்துடன் கூட்டு உடன்படிக்கை களை எட்டியுள்ளமை குறிப்பிடத்தக் கது.



# சுகாதாரப் பராமரிப்பு நிதி தொடர்பில் மத்திய அரசுடன் கியூபெக் உடன்பாடு

கியூபெக்,மார்ச்20

சுகாதார பராமரிப்பு நிதியிடல் தொடர்பில் மத்திய அரசாங்கத்துடன் உடன்பாட்டிற்கு வந்த முதலாவது மாநிலமாக கியூபெக் மாறியுள் ளது.

இந்த உடன்பாட்டின் கீழ் அடுத்த 10 வருடங்களுக்கு கியூபெக் மாநிலம் 900 மில்லியன் டொலர்கள் மேலதிக நிதியைப் பெறும் எனத் தெரிவிக் கப்படுகின்றது.

இந்த புதிய நிதியுதவியானது எவ் வித நிபந்தனைகளுமின்றி கிடைப்ப தாக கியூபெக் மாநில முதல்வர் தெரி வித்துள்ளார்.

தமது விருப்பத்திற்கு ஏற்றவாறு முதலீடுகளைச் செய்வதற்கு உரிமை கியூபெக்கிற்கு இருப்பதாகவும், சுகா தாரத் துறை என்பது அத்தகைய முன்னுரிமைப் பிரிவு எனவும், அந்த விடயத்தில் மத்திய அரசாங்கத்திற்கு எந்த உரிமையும் இல்லை எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்த பத்து வருடங்களுக்கு சுகா தார பராமரிப்பு தொடர்பில் மாநிலங் களுக்கு உதவி செய்வதற்காக மத் திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்ட 196 பில்லியன் டொலர்கள் திட்டத்தின் ஒரு பகுதியாக கியூபெக் மாநிலத்துடனான இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.